## கொடைக்கானல் நகராட்சி

**2018ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9ம் நாள் (9.02.2018) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் அவசரக் கூட்டம்.**

முன்னிலை: திரு.க.சரவணன்,பி.எஸ்.சி.,
தனி அலுவலர்.

### மன்றப் பொருள்கள்

1) கொடைக்கானல் நகராட்சி உள்ளாட்சி தேர்தல் 2016ல் நகர்மன்ற உறுப்பினர் பதவிக்கு போட்டியிட இந்நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.எல்.ஜான்எபிநேசர் தனது ஒப்பந்தப் பதிவை ரத்து செய்துள்ளார். எனவே, அன்னாருக்கு வழங்கப்பட்ட கீழ்கண்ட விபரப்படியான பணி உத்தரவுகளை ரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும், நகராட்சியின் நிதிநிலைக்கு ஏற்ப பணியின் அவசியத்திற்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | நிதி | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | பொது நிதி | வார்டு எண்.22ல் தந்திமேடு பகுதியில் சிமெணட் சாலை மற்றும் தாங்கு சுவர் அமைத்தல். | 2.00 |
| 2 | | செல்லபுரம் குப்புசாமி வீடு முதல் விஜி வீடு மற்றும் சிம்சோன் வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல். | 5.00 |
| 3 | | செல்லபுரம் பகுதியில் தாங்கு சுவர் அமைத்தல். | 7.00 |
| 4 | | காமராஜர்சாலை சி.எஸ்.ஐ சர்ச் பின்புறம் தாங்கு சுவர் அமைத்தல். | 9.50 |
| 5 | | லாஸ்காட் ரோடு மேல் பகுதியில் வில்லியம்ஸ் வீடு பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல். | 3.00 |
| 6 | | செல்லபுரம் பகுதியில் சிமெண்ட் சாலை மற்றும் தாங்கு சுவர் அமைத்தல். | 9.00 |
| 7 | சுங்க நிதி | செல்லபுரம் பகுதியில் தடுப்புச் சுவர் அமைத்தல் | 4.98 |

அலுவலக குறிப்பு – அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **303, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்பட்டது.** |

*******

2) கொடைக்கானல் நகராட்சியின் நகரமைப்பு பிரிவு வாகனம் TN 57 AY 5392க்கு கியர் பாக்ஸ் கவர் அசெம்பிளி, வீல் பிரேக், ஆயில் சர்வீஸ் உள்ளூரில் செய்வதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கிழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | பணிமனையின் பெயர் | Spares in Rs. | Labour in Rs. | Total in Rs |
|---|---|---|---|---|
| 1 | Thiru. Mani,<br>Peniel Auto Works, Old Convent Road, Kodaikanal. | 10332/– | 2700/– | 13032/– |
| 2 | Thiru. Kannan, Kodai Autaomobiles, Convent Road, Kodaikanal. | 12281/– | 4150/– | 16431/– |
| 3 | Thiru. Saravanakumar,<br>Mahindra and Mahindra Aouto Garage. | 12281/– | 3400/– | 15142/– |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s.Peniel Auto Works கொடைக்கானல் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று பணி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1) அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (கோப்பு ந.க.எண்.4071/2017/எப்.1)

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 304, நாள். 09.02.2018. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | 1.அனுமதிக்கப்பட்டது.<br>2.அங்கீகரிக்கப்பட்டது. |

*******

3) கொடைக்கானல் நகராட்சிப் பகுதியில் பிளாஸ்டிக் பயன்பாடுகளை குறைத்தல் திடக்கழிவு மேலாண்மை சம்மந்தமான விழிப்புணர்வு மற்றும் தெரு சாலைகளில் சுற்றித் திரியும் மாடுகளை நகராட்சியினால் பிடித்து அபராதம் விதிக்கவும், விழிப்புணர்வு வாசகங்களை வாகனம் மூலம் ஒலிபெருக்கி அமைத்து 24 வார்டுகளிலும் விளம்பரம் செய்ய 15.12.2017 அன்று நாள் ஒன்றுக்கு தொகை விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் விபரம் | நாள் ஒன்றுக்கு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.S.A.ஜெசிந்திரன்,<br>இசைராணி ஆடியோஸ், PCK காம்ளக்ஸ் நாயுடுபுரம், கொடைக்கானல். | ரூ.3500/– |
| 2 | திரு.V.ராஜன், அன்னை பாத்திமா ஆடியோஸ்,PCK காம்ளக்ஸ் நாயுடுபுரம், கொடைக்கானல். | ரூ.3850/– |

வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் திரு.S.A.ஜெசிந்திரன், கொடைக்கானல் அவர்கள் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளார்.

அலுவலக குறிப்பு:
1) வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.S.A.ஜெசிந்திரன் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 18.12.2017 முதல் 25.12.2017 வரை விளம்பரம் செய்ய பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) இதற்கான செலவுத் தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 305, நாள். 09.02.2018. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | 1.ஏற்கப்பட்டது.<br>2.அனுமதிக்கப்பட்டது.<br>3.அனுமதிக்கப்பட்டது. |

*******

4) கொடைக்கானல் நகராட்சி குப்பைக்கிடங்கில் மின் இணைப்பு பெறுவதற்கு வயரிங் வேலைகள் செய்வதற்கு கீழ்கண்ட பொருட்கள் இந்நகராட்சி மின் பணியாளர் திரு.என்.ரசல் ராஜேந்திரன் என்பவரால் ரூ.15,600/– ரூபாய் பதினைந்தாயிரத்து அறுநூருக்கு வாங்கி பொருத்தப்பட்டுளதாக பட்டியல் சமர்ப்பித்துள்ளார். மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து திரு.என்.ரசல் ராஜேந்திரன் மின் பணியாளருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 306, நாள். 09.02.2018. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்பட்டது. |

*******

5) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான நகர்நல அலுவலர் குடியிருப்பில் பல்வேறு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே அதனை சீர்செய்யும் பொருட்டு ரூ.2,40,000/—ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதியும், மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **307, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்பட்டது.** |

*******

6) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான நாயுடுபுரம்—பாக்கியபுரம் சந்திப்பு பிரிவில் உள்ள IPC ஆலயத்திற்கு முன்புறம் உள்ள சாலை பழுதடைந்துள்ளதால், மேற்படி சாலையினை சீர் செய்திடவும், தாங்கு சுவர் அமைத்திடவும், ரூ.6.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஆறு லட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதியும், மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **308, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்பட்டது.** |

*******

7) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான படகு குழாமில் சிதிலமடைந்த மற்றும் உபயோக படுத்த இயலாத நிலையிலுள்ள படகுகள், கே.ஆர்.ஆர்.கலையரங்க வளாகத்தில் அமைந்துள்ள Dashing Car ல் பயன்படுத்தப்பட்டு தற்போது உபயோகமற்ற நிலையில் பழுதடைந்துள்ள Dashing Car கள் நகரமைப்பு பிரிவின் மூலம் சாலையோர ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் போது கொண்டுவரப்பட்ட கடைகள் மற்றும் பெட்டிகள், பொது சுகாதாரப் பிரிவின் உபயோகமற்ற தள்ளுவண்டிகள் ஆகியவற்றை 11.01.2018 அன்று பொது ஏலம் விடப்பட்டதில் கோரப்பட்ட ஏலக்கேள்வித் தொகை கீழ்கண்டவாறு

| வ.எண் | பெயர் | இரும்பு கிலோ ஒன்றிற்கு ரூ. | தகரம் கிலோ ஒன்றிற்கு ரூ. |
|---|---|---|---|
| 1 | ஜான் பீட்டர் | ரூ.12/— | ரூ.10/— |
| 2 | எம்.அந்தோணி சாமி | ரூ.11.50/— | ரூ.10/— |

இதில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு. ஜான் பீட்டர் என்பவருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) அனுமதி அளிக்கலாம்.
2)பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **309, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **1.அனுமதிக்கப்பட்டது.<br>2.அங்கீகரிக்கப்பட்டது.** |

*******

8) கொடைக்கானல் நகராட்சியில் துப்புரவுப் பணியாளர் குடியிருப்பு அமைப்பதற்கு மண் பரிசோதனை செய்தவகையில் தொகை ரூ.59,000/– வழங்கக் கோரி அண்ணா பல்கலைக் கழக கல்லூரி முதல்வர் அவர்களால் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **310, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **1.அனுமதிக்கப்பட்டது.<br>2.அங்கீகரிக்கப்பட்டது.** |

*******

9) கொடைக்கானல் நகராட்சியில் நவீன எரிவாயு தகன மேடை அமைப்பதற்கு மண் பரிசோதனை செய்தவகையில் தொகை ரூ.59,000/– வழங்கக் கோரி அண்ணா பல்கலைக் கழக கல்லூரி முதல்வர் அவர்களால் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **311, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **1.அனுமதிக்கப்பட்டது.<br>2.அங்கீகரிக்கப்பட்டது.** |

*******

10) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான KVA ஜெனரேட்டர் பழுதடைந்து நிலையில் அலுவலக வளாகத்தில் உள்ளது. மேற்கண்ட ஜெனரேட்டர் பழுது நீக்கி மீண்டும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே, இதனை பொது ஏலம் மூலம் கழிவு நீக்கம் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஏலம் விட மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **312, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **1.அனுமதிக்கப்பட்டது.**<br>**2.அங்கீகரிக்கப்பட்டது.** |

*******

11) உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு மறுவரையறை மேற்கொள்வது தொடர்பாக வழிமுறைகள் மற்றும் உத்தேச கால அட்டவணை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்து வார்டு மறுவரையறை ஆணைய கடிதம் எண்.3172/2017/இஜி1, நாள்.19.10.2017 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 23.10.2017ம் தேதிய 23617/2016/எம்.ஏ.3 கடிதங்கள் வரப்பெற்றதின் அடிப்படையில் கொடைக்கானல் நகராட்சியில் 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியும், குடியிருப்புகள் அடிப்படையிலும் வார்டு மறுவரையறை பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. வார்டு மறுவரையறை அறிக்கைகள் தயார் செய்திட கணினி வரைபடங்கள் நகரம் மற்றும் வார்டு (Autocad Drawings Ward Map and Consolidated Town Map) வாரியாக தயார் செய்தல், வண்ணங்களில் வார்டு மேப் பிரிண்ட் செய்தல் (A2 & A3 Size) அறிக்கைகள் தயார் செய்து பைண்டிங் செய்தல் போன்ற பணிகளை கொடைக்கானல் நகரில் உள்ள NGN Associate கணினி நிறுவனத்தில் மேற்கொண்ட வகையில் தொகை ரூ.40,900/– (ரூபாய் நாற்பதாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) வழங்க கோரி பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே, தேர்தல் பணியின் அவசர தேவையினை கருத்தில் கொண்டு மேற்கண்ட பணிகளை மேற்கொண்டமைக்கும், அதற்கான செலவினத்தினை வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1) அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **313, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **1.அனுமதிக்கப்பட்டது.**<br>**2.அனுமதிக்கப்பட்டது.** |

*******

12) திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.3293/2016/ஊ.வ.8, நாள்.12.01.2018ன்படி கொடைக்கானல் நகராட்சியின் கீழ்கண்ட இடங்களில் இ டாய்லட் (E-Toilet) அமைப்பதற்கு தேவையான மின்சார இணைப்புடன் கூடிய Bio-digester தண்ணீர் வசதி அமைத்தல் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்ச த்தில்) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | மூஞ்சிக்கல் பேருந்து நிறுத்தம் அருகில் அமைக்கப்படவுள்ள E-Toilet ற்கு மின்சார இணைப்புடன் கூடிய Bio-digester தண்ணீர் வசதி அமைத்தல். | 1.34 |
| 2 | குறிஞ்சி ஆண்டவர் கோவில் தெருவில் அமைக்கப்படவுள்ள E-Toilet ற்கு மின்சார இணைப்புடன் கூடிய Bio-digester தண்ணீர் வசதி அமைத்தல். | 1.34 |
| 3 | பிரையண்ட் பூங்கா அருகில் அமைக்கப்படவுள்ள E-Toilet ற்கு மின்சார இணைப்புடன் கூடிய Bio-digester தண்ணீர் வசதி அமைத்தல். | 1.34 |
| 4 | ஏரிச்சாலையில் உள்ள விநாயகர் கோவிலில் அமைக்கப்படவுள்ள E-Toilet ற்கு மின்சார இணைப்புடன் கூடிய Bio-digester தண்ணீர் வசதி அமைத்தல். | 1.34 |
| 5 | பெய்ரி கிராஸ் ரோட்டில் அமைக்கப்படவுள்ள E-Toilet ற்கு மின்சார இணைப்புடன் கூடிய Bio-digester தண்ணீர் வசதி அமைத்தல். | 1.34 |

மேற்கண்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.2121/2016/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **314, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **பதிவு செய்யப்பட்டது.** |

*******

13) கொடைக்கானல் நகராட்சி வளர்ச்சிப் பணிகளை தொழில்மலராக வெளியிட்ட வகையில் R Green Associates என்ற நிறுவனத்திற்கு தொகை ரூ.25,200/– (ரூபாய் இருபத்தைந்தாயிரத்து இருநூறு வழங்கக் கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல் படி தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **315, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்பட்டது.** |

*******

14) கொடைக்கானல் நகரம் இந்தியாவின் மிக முக்கிய சுற்றுலா நகரமாக இருப்பதால் உலக நாடகளிலிருந்து தினசரி, பல்லாயிரக் கணக்கான சுற்றுலா பயணிகள் இந்நகரின் இயற்சையினை கண்டு களித்து வருகின்றனர். இதனால் இந்நகரினை தினசரி மிக தூய்மையாக பராமரிக்க வேண்டியத இந்நகராட்சியின் முக்கிய கடமையாகும்.

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தற்போது 8 வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளது. ஆனால் பொது சுகாதாரப் பிரிவில் 2 நிரந்தர ஓட்டுநர்களே பணியில் உள்ளதால் வாகனங்களை இயக்குவதற்கு பற்றாக்குறைவாக உள்ளதால் நகர்மன்றத் தீர்மான எண்.45, நாள்.17.02.2017ன்படி தீர்மானம் இயற்றப்பட்டு திரு.P.சுரேஷ்குமார் என்பவருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு 6 ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது 31.01.2018 உடன் முடிவடைவதால் துப்புரவுப் பணியின் அவசர அவசியம் கருதி நகரினை தூய்மையாக பராமரிக்க ஏற்கனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்து பணி செய்த வந்த மதுரை திரு.P.சுரேஷ்குமார் என்பவர் கொடுத்துள்ள குறைந்த அதே தொகையில் 02.02.2018 முதல் 31.03.2018 வரை பணி செய்ய அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3) துப்புரவுப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.6343/2015/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **316, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **1.அனுமதிக்கப்பட்டது.<br>2.அனுமதிக்கப்பட்டது.<br>3.அங்கீகரிக்கப்பட்டது.** |

*******

15) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணிக்கு குப்பைகள் அகற்றப்பயன்படுத்தப்பட்டு வரும் பொது சுகாதாரப் பிரிவு வாகனங்களுக்கு சிறு சிறு பழுதுகள் சரி செய்தது, விழிப்புணர்வு பணிக்காக பிளக்ஸ் பேனர் அடித்தது, டெங்கு தடுப்பு பணிக்கு பிளாஸ்டிக் கேன், டார்ச் லைட் வாங்கிய வகையில் ரூ.19,315/– (ரூபாய் பத்தொன்பதாயிரத்து முந்நூற்றி பதினைந்து மட்டும்) என்னால் செலவு செய்யப்பட்டது என திரு.பா.பாண்டிச்செல்வம், துப்புரவு ஆய்வாளர் குறிப்பு கொடுத்துள்ளார். எனவே, அன்னாருக்கு மேற்கண்ட தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.302/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **317, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **1.அனுமதிக்கப்பட்டது.<br>2.அனுமதிக்கப்பட்டது.** |

*******

16) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் தளவாடச் சாமான்கள் வாங்கி இரண்டு ஆண்டுகளுக்கும் மேல் ஆகிவிட்டதாலும், எதிர்வரும் மே மாதம் மலர்க்கண்காண்ட்சி நடைபெறுவதால் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாக இருப்பதால் நகரில் சேகரமாகும் குப்பைகளை உடனுக்குடன் அப்புறப்படுத்தி நகரின் சுகாதாரத்தை பேணும் பொருட்டு துப்புரவு பணிக்கு தேவைப்படும் தளவாடச் சாமான்கள் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3) துப்புரவுப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.301/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **318, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **1.அனுமதிக்கப்பட்டது.<br>2.அனுமதிக்கப்பட்டது.<br>3.ஏற்கப்பட்டது.** |

*******

17) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணி மேற்பார்வையாளராக பணிபுரியும் திருமதி.மு.ஜெயலட்சுமி என்பவர் தான் ஒரு மாற்றுத் திறனாளி பெண் என்றும் இதனால் தொடர்ந்து களப்பணி ஆற்றுவதால் அடிக்கடி உடல்நிலை பாதிப்படைகிறது எனவும் அதனால் தன்னுடைய உடல்நிலை மற்றும் குடும்ப சூழ்நிலை கருதி தனக்கு துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடத்திற்கு இணையான மாற்றுப் பணி வழங்கி உதவிடுமாறு கடிதம் அளித்துள்ளார். அன்னாரின் மருத்துவ சான்றிதழில் தன்னுடைய காலில் அறுவை சிகிச்சை செய்து பிளேட் வைத்துள்ளதால் அதன் அதிர்வினால் கால்வலி தொடர்ந்து ஏற்படுகிறது என சான்றிதழ் அளித்துள்ளார். எனவே, இது சம்மந்தமாக நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.300/2018/எச்.1)

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 319, நாள். 09.02.2018. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | 1.அனுமதிக்கப்பட்டது.<br>2.அனுமதிக்கப்பட்டது. |

*******

18) கொடைக்கானல் நகராட்சிக்கு மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் அவர்களின் வளர்ச்சி நிதி (இரண்டாவது மாநில நிதிக்குழு)ன் கீழ் பணி மேற்கொள்வதற்கு 2.02.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு அட்டவணை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | மூஞ்சிக்கல் பேருந்து நிறுத்தம் அருகில் அமைக்கப்படவுள்ள E-Toilet ற்கு மின்சார இணைப்புடன் கூடிய Bio-digester தண்ணீர் வசதி அமைத்தல். | 1.34 | M/s.Eram Scientific Solutions, Pvt,Ltd., Kerala.<br><br>Ramswarup Traders Pvt,Ltd., Assam. | மதிப்பீடு விகிதம்<br><br>2.50% அதிகம் |
| 2 | குறிஞ்சி ஆண்டவர் கோவில் தெருவில் அமைக்கப்படவுள்ள E-Toilet ற்கு மின்சார இணைப்புடன் கூடிய Bio-digester தண்ணீர் வசதி அமைத்தல். | 1.34 | M/s.Eram Scientific Solutions, Pvt,Ltd., Kerala.<br><br>Ramswarup Traders Pvt,Ltd., Assam. | மதிப்பீடு விகிதம்<br><br>2.50% அதிகம் |
| 3 | பிரையண்ட் பூங்கா அருகில் அமைக்கப்படவுள்ள E-Toilet ற்கு மின்சார இணைப்புடன் கூடிய Bio-digester தண்ணீர் வசதி அமைத்தல். | 1.34 | M/s.Eram Scientific Solutions, Pvt,Ltd., Kerala.<br><br>Ramswarup Traders Pvt,Ltd., Assam. | மதிப்பீடு விகிதம்<br><br>2.50% அதிகம் |
| 4 | ஏரிச்சாலையில் உள்ள விநாயகர் கோவிலில் அமைக்கப்படவுள்ள E-Toilet ற்கு மின்சார இணைப்புடன் கூடிய Bio-digester தண்ணீர் வசதி அமைத்தல். | 1.34 | M/s.Eram Scientific Solutions, Pvt,Ltd., Kerala.<br><br>Ramswarup Traders Pvt,Ltd., Assam. | மதிப்பீடு விகிதம்<br><br>2.50% அதிகம் |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 5 | பெய்ரி கிராஸ் ரோட்டில் அமைக்கப்படவுள்ள E-Toilet ற்கு மின்சார இணைப்புடன் கூடிய Bio-digester தண்ணீர் வசதி அமைத்தல். | 1.34 | M/s.Eram Scientific Solutions, Pvt,Ltd., Kerala.<br><br>Ramswarup Traders Pvt,Ltd., Assam. | மதிப்பீடு விகிதம்<br><br>2.50% அதிகம் |

அலுவலக குறிப்பு. 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 320, நாள். 09.02.2018. |
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | 1.ஏற்கப்பட்டது.<br>2.அங்கீகரிக்கப்பட்டது. |

*******

19) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான பொலிரோ ஈப்பு வாகனம் TN 57 AS 0817 க்கு 113000 கி.மீ சர்வீஸ் பணிகள் மதுரை கப்பலூர் டி.வி.எஸ் பணி மனையில் மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) அனுமதி அளிக்கலாம்.
2)பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 321, நாள். 09.02.2018. |
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | 1.அனுமதிக்கப்பட்டது.<br>2.அங்கீகரிக்கப்பட்டது. |

*******

20) கொடைக்கானல் நகராட்சியில் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு இந்நகராட்சி வளர்ச்சிப் பணியினை கீழ்கண்ட நாளிதழ்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவின்படி, விளம்பரமாக வெளியிட்ட வகையில் கீழ்கண்டவாறு தொகை வழங்கக் கோரி, பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல் படி தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | Star Consultancy, Madurai | 42, Date: 3.01.2018 | 24,885 |
| 2 | Maalai Malar | DGL-D17120319, Date:31.12.2017 | 13,860 |
| 3 | Thina Boomi | 61223 dated: 31.12.2017 | 12,600 |
| 4 | Dhinasuriyan | 3235 dated: 31.12.2017 | 9,660 |

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 322, நாள். 09.02.2018. |
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்பட்டது. |

*******

21) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான ஏரிச்சாலையில் புதியதாக நவீன படகு குழாம் அமைத்திடவும், படகு குழாமிற்கு புதிய படகுகள் வாங்கி BOT (Build Operate Transfer) முறையில் பயன்படுத்திடவும், வருவாய் பகிர்வு முறையில் (Revenue Sharing Basis) தொடர்ந்து பராமரித்திடவும் அனுமதி வழங்க கோரி M/s.Sharshinis contractor, Sattur நிறுவனத்தினரால் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. /s.Sharshinis contractor, Sattur நிறுவனத்தின் பிரேரணை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – நகராட்சியின் தற்போதைய நிதி நிலையினை கருத்தில் கொண்டும், நகராட்சியின் வருவாயினை பெருக்கும் நோக்கத்தோடு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறும் பொருட்டு கருத்துரு அனுப்பிட அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **323, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

22) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணிக்காக குப்பைகள் அகற்றப் பயன்படுத்தப்பட்டு வரும் TN 57 W 9357 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு தகுதிச் சான்று காலம் முடிவுற்றுள்ளதால் தகுதிச் சான்றினை புதுப்பிக்க வாகனத்தை பழுது நீக்கம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3) துப்புரவுப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.346/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **324, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **1.அனுமதிக்கப்பட்டது.<br>2.அனுமதிக்கப்பட்டது.<br>3.ஏற்கப்பட்டது.** |

*******

23) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் நகரில் பராரியாய் சுற்றித்திரியும் நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த நாய்களுக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்வதற்கு நகரில் சுற்றித்திரியும் நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து பின் மீண்டும் பிடித்த இடத்திலே விடுவதற்கு TN AU 7822 டாடா ஏசிய வாகனம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வாகனம் புதிதாக வாங்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கும் மேல் ஆகிவிட்டதால் தகுதிச்சான்று புதுப்பிக்க பழுது நீக்க பணிகளை சரி செய்து தருவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.65,000/– (ரூபாய் அறுபத்தைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3) வாகனத்தின் பயன்பாட்டினை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.344/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **325, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **1.அனுமதிக்கப்பட்டது.<br>2.அனுமதிக்கப்பட்டது.<br>3.ஏற்கப்பட்டது.** |

*******

24) கொடைக்கானல் நகராட்சிக்குச் சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களை 2018–2019 முதல் 2020–2021ம் ஆண்டு வரை கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு 25.01.2018ம் தேதி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள உயர்ந்தபட்ச ஏலத் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் தொகை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | திருவாளர்கள் | பொது ஏலம் ரூபாய் | ஒப்பந்தப் புள்ளி ரூபாய் | உச்ச கேள்வி ரூபாய் |
|---|---|---|---|---|---|
| | நகராட்சிக்கு சொந்தமான புதிய அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள சிற்றுந்து நிறுத்தக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | K.நாகராணி,<br>க.எண்.4B-106, வாட்டர் டேங்க்,<br>நாயுடுபுரம், கொடைக்கானல். | 1,21,000 | –– | 1,67,000 |
| | | A.ரமேஷ், த/பெ. I. ஆரோக்கியதாஸ்,<br>பிலிஸ்வில்லா 2வது தெரு,<br>கொடைக்கானல். | 1,20,000 | –– | |
| | | B.அப்துல் சலாம், த/பெ. R.பாபு,<br>M.M.தெரு, குறிஞ்சி நகர்,<br>கொடைக்கானல். | –– | 1,67,000 | |
| | | S.அக்பர்சேர்ட்,<br>8/128, டவுன் பள்ளிவாசல் தெரு,<br>பிலிஸ்வில்லா, கொடைக்கானல். | –– | 75,000 | |

<u>அலுவலக குறிப்பு</u> : மேற்கண்ட குத்தகை இனத்திற்கு திரு. B.அப்துல் சலாம் என்பவரின் அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி ஏலக் கேள்வித் தொகை ரூ.167000/–ஐ விட கூடுதலாகவும் கடந்த ஆண்டின் குத்தகை தொகையான ரூ.40,225/–ஐ விட பொது ஏலத் தொகை 25.01.2018ம் தேதியில் கேட்கப்பட்ட உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ.121000/–ஐ விட ஒப்பந்தப்புள்ளியில் ரூ.167000/–க்கு திரு. B.அப்துல் சலாம் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, ஒப்பந்தப்புள்ளியில் திரு. B.அப்துல் சலாம், த/பெ.R.பாபு, கொடைக்கானல் என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.167000/–ஐ மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி, சேவை வரியாக அன்னாரிடமிருந்து வசூல் செய்து சேவை வரி செலுத்தவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **326, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

25) கொடைக்கானல் நகராட்சிக்குச் சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களை 2018–2019 முதல் 2020–2021ம் ஆண்டு வரை கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு 25.01.2018ம் தேதி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள உயர்ந்தபட்ச ஏலத் தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் தொகை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | திருவாளர்கள் | பொது ஏலம் ரூபாய் | ஒப்பந்தப் புள்ளி ரூபாய் | உச்ச கேள்வி ரூபாய் |
|---|---|---|---|---|---|
| | நகராட்சிக்கு சொந்தமான பசுமை பள்ளத்தாக்கு பகுதியில் உள்ள கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமம். | M.உதயக் குமார்,த/பெ. M.முனியாண்டி,<br>கதவு எண்.69/130, இந்திரா நகர்,<br>கொடைக்கானல். | 1,97,500 | –– | 1,98,000 |
| | | G.நாகராஜன்,த/பெ.V.கோவிந்தராஜன்,<br>4/209, திருக்குடும்ப இல்லம்,<br>பெர்ன்ஹில் ரோடு, கொடைக்கானல். | 1,98,000 | –– | |
| | | G.ரமேஷ்கண்ணா,<br>த/பெ. V.கோவிந்தராஜ், | –– | 1,15,000 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | வட்டகானல், கொடைக்கானல். | | | |
| | | G.நாகராஜன்,த/பெ.V.கோவிந்தராஜன், 4/209, திருக்குடும்ப இல்லம், பெர்ன்ஹில் ரோடு, கொடைக்கானல். | -- | 1,49,999 | |

அலுவலக குறிப்பு : மேற்கண்ட குத்தகை இனத்திற்கு திரு. G.நாகராஜன், என்பவரின் அதிகபட்ச ஏலக் கேள்வித் தொகை ரூ.1,98,000/– கடந்த மூன்று ஆண்டு சராசரி தொகை ரூ.74,609/– மற்றும் கடந்த ஆண்டு ஏலத் தொகை ரூ.71,000/–ஐ விட கூடுதலாக உள்ளதாலும் அன்னாரின் உயர்ந்தபட்ச பொது ஏலத் தொகையான ரூ.1,98,000/–ஐ ஏற்று மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும் நடைமுறையில் உள்ள விதிமுறையின்படி சேவை வரியாக அன்னாரிடமிருந்து வசூல் செய்து சேவை வரி செலுத்தவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **327, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

26) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றிற்கு 01.04.2003 முதல் அரசாணை எண் (டி) 147 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.12.2000ன் படியும் நகர்மன்றத் தீர்மானம் எண்.881, நாள்.27.01.2004ன்படி கடை வாடகை நிர்ணயம் செய்து குத்தகைதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பியதை ஆட்சேபித்து கொடைக்கானல் வர்த்தகர்கள் சங்கம் நிர்வாகிகளால் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்கள் (வழக்கு எண்.W.P.No.22361/04, 22362/04 மற்றும் 22363/04) மேற்படி வழக்கிற்கு மேல் முறையீட்டு மனு செய்தமைக்கு நகராட்சி சார்பாக ஆஜராகி திரு.G.சங்கரன் சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் அவர்கள் வழக்கினை முடித்து கொடுத்தமைக்கு வழக்கு எண்.W.P.No.30260 of 2004, நாள்.10.07.2017 மற்றும் W.P.No.23156 of 2004, நாள்.15.09.2017ம் தேதி வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளதால் வழக்கு கட்டணம் ரூ.15000/– மற்றும் மேல் முறையீட்டு கட்டணம் ரூ.15000/– ஆக மொத்தம் ரூ.30000/– (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) வழங்கக் கோரி பட்டியல் வரப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையை திரு.G.சங்கரன் , சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞருக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) அனுமதிக்கலாம்.
2) அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **328, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **1.அனுமதிக்கப்பட்டது.<br>2.அங்கீகரிக்கப்பட்டது.** |

*******

27) இந்நகராட்சியின் குத்தகை இனங்களான அண்ணாசாலையில் உள்ள முதலியார்புரம் முதல் தெருவில் நகராட்சியால் புதிதாக கட்டப்பட்டுள்ள தண்ணீர் தொட்டியின் கீழ்பகுதியில் இரண்டு கடைகள் (1 மற்றும் 2) பயன்பாட்டு உரிமம் 2018–2019 முதல் 2020–2021 முடிய மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் குத்தகை உரிமம் பெற்றுக் கொள்வதற்காக பொது ஏலம் மற்றும் திறந்த ஒப்பந்தப்புள்ளிக்கான அறிவிப்பினை விளம்பரம் செய்யக்கோரி திண்டுக்கல் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புதுறை மூலம் விளம்பரம் செய்யக் கேட்டுக் கொள்ளப்பட்டது. மேற்படி அறிவிப்பு மக்கள் குரல் நாளிதழில் 19.01.2018ம் தேதியில் விளம்பரம் செய்யப்பட்டது. அதற்கான பட்டியல் எண்.MA.B.078008, நாள்.20.01.2018க்கு அறிவிப்புக்கான விளம்பரக் கட்டணம் ரூ.16,581/–ஐ செலுத்தக் கோரப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட விளம்பரக் கட்டணத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1759/2017/அ3)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **329, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்பட்டது.** |

*******

28) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள வணிக நிறுவனங்கள் மற்றும் தொழில்புரிபோர்களுக்கான அச்சம்மற்றும் அருவறுக்கத்தக்க தொழில் உரிமக் கட்டணம் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 249 மற்றும் 250ன்படி வசூலிக்கப்பட்டு வருகிறது. இத்தகைய தொழில் உரிமக் கட்டணங்கள் உயர்த்தி வசூலிப்பதற்கு நகர்மன்றத் தீர்மான எண்.267, நாள்.30.11.2017ன்படி, தீர்மானம் இயற்றப்பட்டு பொது மக்கள் மற்றும் தொழில் நிறுவன உரிமையாளர்களிடமிருந்து அராணை ஆலோசனை மற்றும் ஆட்சேபனை கேட்டு நாளிதழில் அறிவிப்பு செய்யப்பட்டதில் ஹோட்டல் ஓனர் அசோசியேசன் சார்பாக ஆட்சேபனை தெரிவித்து பதிவு தபாலில் கடிதம் வரப்பெற்றது. பின் 07.02.2018ல் நகராட்சி அலுவலகத்தில் இது சம்மந்தமாக ஆலோசனைக் கூட்டம் ஆணையாளர் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்றதில் ஹோட்டல், காட்டேஜ் வர்த்தக சங்கம் மற்றும் சாக்லேட் தயாரிப்பாளர்கள் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இதில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்ட இனங்களுக்கு தெளிவான விளக்கம் தெரிவிக்கப்பட்டு அனைத்து சங்க பிரதிநிதிகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் கீழ்கண்டுள்ள அட்டவணையில் கண்டுள்ளவாறு தொழில் உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்வதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

| வ. எண் | தொழில் / வணிக இனங்கள் | உயர்த்தப்படவுள்ள கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | நெல் வேக வைப்பது | 1000 (ஆயிரம்) |
| 2 | கொழுப்பு அல்லது கந்தகத்தை உருக வைப்பது | 500 (ஐநூறு) |
| 3 | மாட்டுச்சாணி போன்ற உரங்கள் சேமித்து வைப்பது | 500 (ஐநூறு) |
| 4 | இரசாயன உரம் சேமித்து வைப்பது மற்றும் விற்பனை செய்வது | 1000 (ஆயிரம்) |
| 5 | எலும்பு, மீன், கருவாடு சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 500 (ஐநூறு) |
| 6 | தோல் பதனிடப்பட்டது சேமித்தல், விற்பனை செய்தல் | 500 (ஐநூறு) |
| 7 | மீன் எண்ணெய் தயாரித்தல் | 500 (ஐநூறு) |
| 8 | குங்குலியம் தைலம் தயாரித்தல் | 1000 (ஆயிரம்) |
| 9 | டிரை கிளீனர்ஸ் | 250(இருநூற்றி ஐம்பது) |
| 10 | வாடகைக்கு விடுவதற்கு கம்பளி சேகரித்து வைத்தல் | 1000 (ஆயிரம்) |
| 11 | சோப்பு தயாரித்தல் | 1000 (ஆயிரம்) |
| 12 | சாயம் காய்ச்சுதல் | 2000 (இரண்டாயிரம்) |
| 13 | எண்ணெய் கொதிக்க வைத்தல் | 500 (ஐநூறு) |
| 14 | செங்கல் சூளை | 2000 (இரண்டாயிரம்) |
| 15 | சுண்ணாம்பு காளவாசல் கட்டிட காரியத்திற்கு | 2000 (இரண்டாயிரம்) |
| 16 | சுண்ணாம்பு காளவாசல் வீடுகளுக்கு வெள்ளையடிப்பது | 1000 (ஆயிரம்) |
| 17 | ஹோட்டல் | 3000 (மூவாயிரம்) |
| 18 | சிற்றுண்டி | 1000 (ஆயிரம்) |
| 19 | டீ கடை | 500 (ஐநூறு) |
| 20 | மனிதர்கள் சாப்பிடுவதற்கு மாவு அல்லது மாவினால் தயாரிக்கப்பட்ட தின் பண்டங்கள் ரொட்டி கிடங்கு. | 1000 (ஆயிரம்) |
| 21 | இனிப்பு வகைகள், பேக்கரி பொருள் விற்பனை | 1000 (ஆயிரம்) |
| 22 | சோடா பேக்கரி | 1000 (ஆயிரம்) |
| 23 | மரம், அடுப்புகரி சேகரித்தல் விற்பனை செய்தல் | 1000 (ஆயிரம்) |
| 24 | கூரை சாமான்கள் உலர்த்துதல் விற்பனை செய்தல் | 500 (ஐநூறு) |
| 25 | பட்டாசு விற்பனை செய்தல் பண்டிகை காலம் மட்டும் | 2000 (இரண்டாயிரம்) |
| 26 | பட்டாசு விற்பனை செய்தல் ஆண்டு முழுவதும் | 5000 (ஐந்தாயிரம்) |
| 27 | சைக்கிள் வாடகைக்கு | 200 (இருநூறு) |
| 28 | பெரிய பலசரக்கு கடை, சூப்பர் மார்க்கெட் | 3000 (மூவாயிரம்) |

| | | |
|---|---|---|
| 29 | சிறு மளிகை | 1000 (ஆயிரம்) |
| 30 | ஸ்பிரிட் அல்லது டர்பன்டைன் சேகரம் செய்து விற்பனை செய்தல் | 1000 (ஆயிரம்) |
| 31 | பழக்கடை, காய்கறிகடை, வெற்றிலை பாக்கு, பிஸ்கட், மிட்டாய் சில்லறை விற்பனை | 500 (ஐநூறு) |
| 32 | திராவகம் சேகரித்தல், விற்பனை செய்தல் | 1000 (ஆயிரம்) |
| 33 | மண்ணெண்ணெய் டின்களில் வைத்து சேகரித்தல், விற்பனை செய்தல் | 1000 (ஆயிரம்) |
| 34 | சினிமா பிலிம், சேகரித்தல், விற்பனை செய்தல் | 500 (ஐநூறு) |
| 35 | வாடகை அல்லது விற்பனைக்கு வீடியோ, கேசட், சிடி, டிவிடி சேகரித்து வைத்தல். | 1000 (ஆயிரம்) |
| 36 | அருவறுப்பான அல்லது சுகக் கேடான நாற்றம் உண்டாகக் கூடிய எதையாவது தயாரித்தல். | 1000 (ஆயிரம்) |
| 37 | டயர்களுக்கு ரீபட்டன் செய்வது | 1000 (ஆயிரம்) |
| 38 | டயர்கள் சேகரம் செய்வது | 1000 (ஆயிரம்) |

| வ. எண் | தொழில் / வணிக இனங்கள் | உயர்த்தப்படவுள்ள கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|
| 39 | கைத்தொழில் உபயோகிக்கும் இயந்திரம் தொழிற்சாலை நிறுவும் இயந்திரம், பணிமனை, மாவு ஆலை, உணவு உற்பத்தி<br>1 முதல் 5 குதிரை திறன் வரை<br>5 முதல் 30 குதிரை திறன் வரை<br>30 குதிரை திறனுக்கு மேல் | <br><br>500 (ஐநூறு)<br>1000 (ஆயிரம்)<br>5000 (ஐந்தாயிரம்) |
| 40 | 5 பசு அல்லது எருமை மாடுகள் வைத்து பால் வியாபாரம் செய்ய | 200 (இருநூறு) |
| 41 | 5 பசு அல்லது எருமை மாடுகளுக்கு மேல் வைத்து பால் வியாபாரம் செய்ய | 300 (முந்நூறு) |
| 42 | பால் அல்லது பாலினால் செய்யப்பட்ட பொருட்களை தூக்கி விற்பனை செய்தல். | 300 (முந்நூறு) |
| 43 | டின்களில் வைத்திருக்கும் பால் அல்லது வெண்ணெய் விற்பனை செய்ய | 1000 (ஆயிரம்) |
| 44 | ஐஸ்கிரீம் தயாரிப்பு, சேமிப்பு, விற்பனை செய்தல் | 1000 (ஆயிரம்) |
| 45 | ஆட்டிறைச்சி விற்பனை செய்தல் | 2500 (இரண்டாயிரத்து ஐநூறு) |
| 46 | கோழி இறைச்சி விற்பனை செய்தல் | 3000 (மூவாயிரம்) |
| 47 | மாட்டிறைச்சி விற்பனை செய்தல் | 3000 (மூவாயிரம்) |
| 48 | பன்றி இறைச்சி விற்பனை செய்தல் | 5000 (ஐந்தாயிரம்) |
| 49 | கறிவெட்டுபவர் (Butcher) நபர் 1க்கு | 100 (நூறு) |
| 50 | ரோடு மார்ஜினில் காய்கறி, பழம் வைத்து விற்பனை செய்ய | 500 (ஐநூறு) |
| 51 | லாபம் சம்பாதிக்கும் பொருட்டு நான்கு கால் பிராணிகள் வைக்கப்பட்டிருக்கின்ற குதிரை லாயம் தொட்டி, கொட்டம் இதர இடங்களுக்கு | 1000 (ஆயிரம்) |
| 52 | குதிரை சவாரிக்கான குதிரை 1க்கு | 1500 (ஆயிரத்து ஐநூறு) |
| 53 | நகராட்சி கழிவு நீர் வாகனம் மூலம் கழிவு நீர் சுத்தம் செய்வதற்கு குடியிருப்புகளுக்கு | லோடு 1க்கு 1000 (ஆயிரம்) |
| 54 | வணிக கட்டிடங்களுக்கு | லோடு 1க்கு 2000 (இரண்டாயிரம்) |
| 55 | அரசு கட்டிடங்களுக்கு | லோடு 1க்கு 1000 (ஆயிரம்) |
| 56 | கேஸ் குடோன் | 2000 (இரண்டாயிரம்) |
| 57 | கேஸ் விற்பனை கடை | 2000 (இரண்டாயிரம்) |
| 58 | களிமண், ஓடு, டைல்ஸ், கடப்பாகல், மார்பிள்ஸ் சேகரித்தல் விற்பனை செய்தல். | 2000 (இரண்டாயிரம்) |
| 59 | ஹோம் மேட் சாக்லெட் தயாரித்தல் | 2500 (இரண்டாயிரத்து ஐநூறு) |
| 60 | ஹோம் மேட் சாக்லெட் விற்பனை செய்தல் | 2000 (இரண்டாயிரம்) |
| 61 | ஹோம் மேட் சாக்லெட் மொத்த விற்பனை | 4000 (நான்காயிரம்) |
| 62 | உணவிற்கு பயன்படுத்தப்படும் வாசனைப் பொருட்கள் சேமிப்பு விற்பனை | 1000 (ஆயிரம்) |
| 63 | திருமண மண்டபம் | 3000 (மூவாயிரம்) |
| 64 | மிட்டாய், பிஸ்கட் மொத்த விற்பனை | 3000 (மூவாயிரம்) |
| 65 | குளிர்பானம் சேமிப்பு, விற்பனை, விற்பனைக்காக பாட்டிலில் அடைக்கப்பட்ட குடிநீர் சேமித்தல். | 2000 (இரண்டாயிரம்) |
| 66 | தங்கும் விடுதி 10 அறைகள் வரை | 5000 (ஐந்தாயிரம்) |
| 67 | தங்கும் விடுதி 10 அறைகளுக்கு மேல் | 10000 (பத்தாயிரம்) |
| 68 | உணவகத்துடன் கூடிய தங்கும் விடுதி | 15000 (பதினைந்தாயிரம்) |
| 69 | உணவகம் மற்றும் பார் வசதியுடன் கூடிய தங்கும் விடுதி, கிளப் | 25000 |

| | | |
|---|---|---|
| | | (இருபத்தைந்தாயிரம்) |
| 70 | ஹோம் ஸ்டே | 2000 (இரண்டாயிரம்) |
| 71 | தள்ளுவண்டிகள், சைக்கிளில் வைத்து விற்கப்படும் தின்பண்டங்கள், உணவு பொருட்கள் டீ காபி குளிர்பானங்கள் | 500 (ஐநூறு) |
| 72 | பெயிண்ட், ஹார்டுவேர் கடை | 1000 (ஆயிரம்) |
| 73 | இட்லி, தோசை மாவு தயாரித்து விற்பனை செய்தல் | 2000 (இரண்டாயிரம்) |
| 74 | காபி கொட்டை அரவை | 500 (ஐநூறு) |
| 75 | விசேச காலங்களுக்கு பாத்திரம், பந்தல் சாமான்கள் வாடகைக்கு விடுதல் | 1000 (ஆயிரம்) |
| 76 | பெட்ரோல் பங்க் | 2500 (இரண்டாயிரத்து ஐநூறு) |
| 77 | பால்பண்ணை | 2000 (இரண்டாயிரம்) |
| 78 | சிமிண்ட் சேகரம், விற்பனை | 2500 (இரண்டாயிரத்து ஐநூறு) |

| வ. எண் | தொழில் / வணிக இனங்கள் | உயர்த்தப்படவுள்ள கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|
| 79 | சாலை ஓரங்களில் பண்டிகை கால கரும்பு விற்பனை | 250 (இருநூற்றி ஐம்பது) |
| 80 | சாலை ஓரங்களில் இளநீர், நொங்கு மக்காச் சோளம் விற்பனை | 500 (ஐநூறு) |
| 81 | கம்பளி, ஸ்வெட்டர் விற்பனை பெரிய கடை | 2000 (இரண்டாயிரம்) |
| 82 | கம்பளி, ஸ்வெட்டர் விற்பனை சிறிய கடை | 1000 (ஆயிரம்) |
| 83 | பேன்ஸி ஸ்டோர், அழகுசாதன பொருட்கள் விற்பனை | 500 (ஐநூறு) |
| 84 | குழந்தைகள் விளையாட்டு பொருட்கள் விற்பனை பெரிய கடை | 1000 (ஆயிரம்) |
| 85 | குழந்தைகள் விளையாட்டு பொருட்கள் விற்பனை சிறிய கடை | 500 (ஐநூறு) |
| 86 | இரவு நேர பாஸ்ட் புட் கடை | 1000 (ஆயிரம்) |
| 87 | எலக்ட்ரிக்கல் பொருட்கள் விற்பனை | 2000 (இரண்டாயிரம்) |
| 88 | எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள் விற்பனை | 2000 (இரண்டாயிரம்) |
| 89 | ஜவுளி கடை | 2000 (இரண்டாயிரம்) |
| 90 | ரெடிமேட் கட்பீஸ் சென்டர் | 1000 (ஆயிரம்) |
| 91 | மதுபான பார்கள் | 5000 (ஐந்தாயிரம்) |
| 92 | ரேசன்கடை, சிறப்பங்காடி | 500 (ஐநூறு) |
| 93 | மரத்தினால் செய்யப்பட்ட பொருட்கள், பர்னிச்சர், சிற்பப் பொருட்கள் | 1000 (ஆயிரம்) |

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்த மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4244/2017/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **330, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **1.அனுமதிக்கப்பட்டது.**<br>**2.அனுமதிக்கப்பட்டது.** |

*******

29) இந்நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அலுவலக பணி நிமித்தமாக வெளியூர் சென்று வந்தமைக்கான பயணச் செலவு தொகை வழங்க கோரி பயணப்படி பட்டியல் சமர்ப்பித்துள்ளார்கள். எனவே, கீழ்காணும் விபரத்திற்கு அவரவர் பெயருக்கு எதிரே குறிப்பிட்டுள்ள பயணப்பட்டியல் தொகையினை இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | அலுவலர் / பணியாளர் பெயர் (ம) பதவி | மாதம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு. S.மூர்த்தி, மேலாளர். | நவம்பர் – 2017 | 2566 |
| | | ஜனவரி–2018 | 3180 |
| 2 | திரு.ப.பிச்சைமணி, கணக்கர் | டிசம்பர் – 2017 | 1980 |
| | | ஜனவரி – 2018 | 3960 |
| 3 | திரு.S.ராஜகோபால், உதவியாளர் | டிசம்பர் – 2017 | 1080 |

| | | | |
|---|---|---|---|
| | | ஜனவரி – 2018 | 2282 |
| 4 | திரு.P.பாண்டி செல்வம், துப்புரவு ஆய்வாளர் | செப்டம்பர்–2017 | 705 |
| | | அக்டோபர்–2017 | 335 |
| | | நவம்பர்–2017 | 1005 |
| | | டிசம்பர் – 2017 | 670 |
| | | ஜனவரி – 2018 | 1714 |
| 5 | திரு. R.பாலாஜி, குடிநீர்பிரிவு சிற்றெழுத்தர். | நவம்பர் – 2017 | 1800 |
| 6 | திரு.R.ஜோதிபாசு, ஓட்டுநர் | அக்டோபர்–2017 | 3230 |
| | | நவம்பர்–2017 | 3195 |
| | | டிசம்பர் – 2017 | 1600 |
| | | ஜனவரி – 2018 | 1200 |
| 7 | திரு.N.ரசல்ராஜேந்திரன், மின்கம்பியாளர் | டிசம்பர் – 2017 | 1360 |
| | | மொத்தம் | 31862 |

ரூ.31862/–ஐ மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி தொகையை பொது நிதியில் இருந்து செலவு செய்யலாம். (ந.க.எண்.3/2006/பி1)

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3/2006/பி1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **331, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்பட்டது.** |

*******

30) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான பழதடைந்த நிலையில் உள்ள 10 KVA ஜெனரேட்டரை இருக்கும் நிலையில் அப்படியே சொந்த பொறுப்பில் ஏலம் எடுத்துக் கொள்வதற்கு 9.02.2018 அன்று ஏலம் கோரப்பட்டது. அதில் உயர்ந்தபட்ச ஏலக் கேள்விகள் கீழ்கண்டவாறு,

1. எம். கென்னடி தொகை = ரூ. 16,000/–
2. பி.சுப்பிரமணி தொகை = ரூ. 15,850/–

இதில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு.எம்.கென்னடி என்பவருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) அனுமதி அளிக்கலாம்.
2)பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **332, நாள். 09.02.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **1.அனுமதிக்கப்பட்டது.<br>2.அங்கீகரிக்கப்பட்டது.** |

ஒம்/–க.சரவணன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.

கொடைக்கானல் நகராட்சி

2018ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15ம் நாள் (15.02.2018) வியாழக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் அவசரக் கூட்டம்.

முன்னிலை: ரா.முருகேசன், M.A.,M.Phil.,B.L.,P.G.D.P.M.,A.P.G.D.U.M.,
தனி அலுவலர்.

மன்றப் பொருள்

1) உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு மறுவரையறை மேற்கொள்வது தொடர்பாக வழிமுறைகள் மற்றும் உத்தேச கால அட்டவணை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்து வார்டு மறுவரையறை ஆணைய கடிதம் எண். 3172/2017/இஜி1, நாள்.19.10.2017 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 23.10.2017ம் தேதிய 23617/2016/எம்.ஏ3 கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்படி, கொடைக்கானல் நகராட்சியில் 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியும், குடியிருப்புகள் அடிப்படையிலும் வார்டு மறுவரையறை பணிகள் முடிக்கப்பட்டு, வரைவு மறுவரையறை கருத்துருக்கள், படிவங்கள் மற்றும் வரைபடங்கள் ஆகியன தயார் செய்யப்பட்டு நகர்மன்றத் தீர்மானம் எண். 260 நாள். 30.11.2017 ல் நகர்மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டது. வரைவு மறுவரையறை உத்தேசங்கள் மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. மேற்படி வரைவு மறுவரையறை உத்தேசங்கள் தொடர்பாக கடந்த 12.1.2018ம் தேதி வரை ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து 23 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பான மண்டல வாரியான ஆய்வுக் கூட்டம் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 6.2.2018 அன்று நடைபெற்றது. பெறப்பட்ட ஆட்சேபணைகள் அரசு வழிகாட்டுதலுக்கு முரணாக இருந்ததால் நிராகரிக்கப்பட்டது. தற்போது மாற்றியமைக்கப்பட்ட உத்தேசங்கள் உறுப்பினர் செயலர், மறுவரையறை ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 3174/2017/தே.பொ.1 நாள். 31.01.2018 ம் தேதிய கடிதத்தின்படி உரிய வழிகாட்டுதலின்படி தயார் செய்யப்பட்டுள்ளது. கொடைக்கானல் நகராட்சியின் 24 வார்டுகளுக்கான மறுவரையறை கருத்துருக்கள் மற்றும் வரைபடங்கள் தயார் செய்யப்பட்டு மாநில மறு வரையறை ஆணையத்திற்கு அனுப்ப மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. ஒப்புதல் அளிக்கலாம்.
(கோப்பு ந.க.எண். 3706/2017/எப்.1)

| | |
|---|---|
| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 333, நாள். 15.02.2018. |
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. |

ஒம்/–ரா.முருகேசன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.